# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”



**உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள், உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும். ஏசாயா 54:13**

மன்னா – 9 ஜுலை 2019 பிரதி – 4



## ஆயர் மடல்



ஆண்டவரும் அருமை இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 01-ஜுன்-2019 அன்று முதல் நமது திருச்சபையில் பணி நியமனம் பெற கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். கர்த்தரை துதிக்கிறேன். பணி நியமனம் செய்த பேராயர் Rt. Rev. Dr. B.N. ∴பென் அவர்களுக்கும், அனுமதி அளித்த பிரதம பேராயர் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். அன்போடு ஏற்றுக்கொண்ட சபைச் செயலர், கமிட்டி அங்கத்தினர்கள், சபை மக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கிறேன்.

விசா கால தாமதத்தினால் சில நாட்கள் தாமதித்தாலும் ஆண்டவருடைய பணியை கொடுக்கப்பட்டிருக்கும் காலங்களில் இணைந்து செய்யவும் இறை ஆற்றலோடு நிறைவேற்றவும், கருத்தோடும், ஜெபத்தோடும் கரம் கோர்த்துக்கொள்ள அன்போடு அழைக்கிறேன்.

### திருச்சபையின் 15-வது பிறந்தநாள்:-

நமது திருச்சபையின் 15-வது பிறந்தநாளை சந்தித்து, மகிழ்ச்சியில் கொண்டாட்டங்களை அனுபவித்தோம். 16-ம்ஆண்டுக்குள் அடி எடுத்து வைக்கும் நமது திருச்சபையின் வாழ்வுக்காகவும், வளர்வுக்காகவும் அதிகமாக ஜெபிக்க உங்களை அன்போடு வேண்டுகிறேன். புதிய ஆண்டில் நமது திருச்சபை அதிகமான ஆத்துமாக்களால் நிரப்பப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் மக்கள் ஒருபடி முன்னேறிச்செல்லவும் ஆண்டவரே அருள்தாரும் என ஜெபிப்போம். ஆலயத்தின் அனைத்து தொழுகையிலும் அசட்டை செய்யாமல் உற்சாகமாயும், உண்மையாயும் பங்கெடுப்போம் என்னும் தீர்மானத்தோடு உறுதியாய் முன்னேற ஆண்டவர் அருளையும் ஆற்றலையும் நிறைவாய் தருவாராக.

### ஏற்றுக்கொள்வோம்:-

இம்மாதம் நமது சிந்தனை **“கர்த்தரின் போதனை”** என்னும் தலையங்கத்தில் அமைதல் சிறப்பு. கல்வி சாலைகள், கல்லூரிகள் என்று கல்வியை மையப்படுத்துகிறது. இக்கல்வி வாழ்வில் உயர்வை கற்றுத் தருகிறது ஆனால் திருச்சபையும் திருமறையும் இறைவன் விரும்பும் வாழ்வையே போதிக்கிறது. எனவே நாம் கல்வியை பகுத்தும் பிரித்துப் பார்த்து கற்றுக்கொள்வது நலமானது.

“கர்த்தர் ஞானத்தை தருகிறார், அவர் வாயினின்று அறிவும், புத்தியும் வரும்” நீதிமொழிகள் 2:6. நமக்கு ஞானம், அறிவு, புத்தி அனைத்தையும் தரும் ஆண்டவனின் போதனையை பிடித்துக்கொண்டு உலகப்பிரகாரமான கல்வியைத் தொடர ஆலோசனை கூறுகிறேன்.

**நன்றி கூறுவோம்:-**

நம்மை கிறிஸ்துவின் போதனையில் வழி நடத்தி வந்த முன்னாள் போதகர்களுக்கு நன்றி கூறுவது நமது கடமையாகும். அவர்களின் வரிசையில் கடந்த நான்கு ஆண்டுகள் சிறந்த பணியாற்றி தாயகம் திரும்பி திருப்பணி தொடரும் நமது முன்னாள் போதகர் Rev. K. கிளாட்சன் அவர்களுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுவோம். அவர்கள் ஆற்றூர் சேகரம் செவரக்கோடு திருச்சபையில் பணிப் பொறுப்பேற்று உள்ளார்கள். அவர்தம் இறைப்பணிப் பயணம் இனிதாய் தொடர இறைவனை வேண்டிக்கொள்வோம்.

**ஜெபித்துக்கொள்வோம்:-**

நமது திருச்சபையிலிருந்து விடுமுறைக் காலத்தில் தாயகம் செல்லும் இறைமக்களுக்காகவும், அவர்தம் பாதுகாப்பான பயணத்திற்காகவும், இனிமையான அனுபவங்களோடு பணியிடம் திரும்பவும் இறை அருள் வேண்டி நாம் ஜெபித்துக் கொள்வோம்.

கன்னியாகுமரி பேராயத்தின் புதிய பேராயராக நியமனம் பெற்று பொறுப்பேற்கும் Rt. Rev. Dr. A. R. செல்லையா அவர்களை நமது திருச்சபை சார்பில் அன்பாய் வாழ்த்துகிறோம். இறைபணியில் இறைதிட்டம் நிறைவேற்ற இறைவனை வேண்டிக்கொள்வோம்.

இந்திய தேசத்தின் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு புதிய பிரதமராக பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு மோடி அவர்களுக்காகவும், புதிய அமைச்சரவை, அமைச்சர்களுக்காகவும் வேண்டிக்கொள்வோம். மனிதநேயமிக்க மதசார்பற்ற நல்லாட்சி நடைபெற இறைவனை மன்றாடுவோம்.

இறையாசி இம்மாதம் முழுவதும் உங்களனைவரோடும் இருந்து வழி நடத்துவதாக

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்.**

# வாழ்த்துகிறோம்!

குமரி திருமண்டலத்தின் சிறந்த மூத்த ஆயரான அருள்பணி முனைவர் A.R. செல்லையா M A, B D, M Th, D Min அவர்கள் இறையியல் தெளிவையும், இறைப்பணி அர்ப்பணிப்பையும், அருள்பணி தொலைநோக்குப் பார்வையையும் பெற்றவர்கள்.




ஆயர் அவர்கள் புல்லுவிளையில் பிறந்து, தொடக்க கல்வியை புத்தளத்திலும், பட்டயப் படிப்பை ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியிலும், முதுகலைப் படிப்பை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும், இறையியல் இளையர் (B D) படிப்பை அரசரடி தமிழ்நாடு இறையியல் கல்லூரியிலும், அருள்பணியியலில் (Missiology) இறையியல் நிறைஞர் (M Th) படிப்பை பெங்களூர் ஐக்கிய இறையியல் கல்லூரியிலும், செராம்பூர் பல்கலைகழகத்தின் மூலம் முனைவர் (D Min) பட்டத்தையும் 2009 ஆண்டு பெற்றவர்.

இறைப்பணியை 1986-ஆம் ஆண்டிலிருந்து குமரி திருமண்டலத்தின் பல திருச்சபைகளிலும் நிறைவேற்றி 2008-ம் ஆண்டிலிருந்து தலைமை சேகர ஆயராக பூவன்கோடு, எஸ்.டி.மாங்காடு, நெய்யூர், நாகர்கோவில் ஆகிய திருச்சபைகளில் சீரிய பணி செய்தார். தலைமைத்துவ பொறுப்புகளிலும், திருமண்டல வெளியீடுகளில் தொடர்ந்து கட்டுரைகள், அருளுரைகள், நூல்கள் எழுதியும் பங்களிப்பு செய்திருக்கிறார். தென்னிந்திய திருச்சபை சினாட் மாமன்ற உறுப்பினராகவும், செயற்குழு உப உறுப்பினராகவும் (2014-2016) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆயர் ஆழ்ந்த சிந்தனையாளர். சிறந்த பண்பாளர், தெளிவான இறையியலாளர், நல்ல பணியாளர், தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் வருகைப் பேராசிரியராகவும், பயிற்சி ஆயர்களை நன்னெறிப்படுத்தும்

திருப்பணி உருவாக்கப்பட்டறைகளை நடத்தியும் அனைவரின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றவர்.

இவர் நமது பேராயத்தில் 13-05-2019 அன்று நடைபெற்ற பேராயர் பெயர் பட்டியல் தெரிவில் 2-வது இடத்தைப்பெற்று சிறந்தார். பின்னர் சினாடு மாமன்ற பேராயர் தெரிவுக்குழுவால் 05-07-2019 அன்று 6-வது பேராயராக பிரகடனப்படுத்தப்பட்டார். 07-07-2019 அன்று பேராயர் அருட்பொழிவு குமரி பேராய தாய் திருச்சபையாகிய மைலாடி திருச்சபையில் நடைபெற்றது. இவரது துணைவியார் பேராசிரியையாக இருந்து ஓய்வு பெற்றவர். திருமணமான ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர்.

இவர் தனது பிறந்தநாள் தினத்தன்று பேராயர் அருட்பொழிவு பெற்றது சிறப்பு. நமது பேராயரின் பணிக்காலம் இறைசித்தம் நிறைவேற்றும் நாட்களாய் அமையவும், பேராயம் வளர்ச்சிநிலை காணவும் இறை அருள்வேண்டி மன்றாட்டோடு CSI தமிழ் திருச்சபை ஓமான் சார்பில் வாழ்த்துகிறோம்.

**இவண்,**
**சபைப்போதகர்**
**சபைக்கமிட்டி & சபை மக்கள்**

## ஆயர் அருளுரை



### போதிக்கும் ஆண்டவர்

**“நான் உனக்கு போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்கு காட்டுவேன் உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்**. – சங்கீதம் 32:8

ஆண்டவர் நமக்கு தரும் நல் ஆலோசனை திருமறை மூலம் வெளிப்படுகிறது. இறைவேண்டல் மூலம் ஆண்டவரிடம் அநேக காரியங்களை கேட்கிறோம். அதே வேளையில் திருமறையின் மூலம் அநேக தீர்வுகளை நாம் கண்டுகொள்ள இயலும்.

“செய்தித்தாள் மனிதன் வாழ்வதைக் காட்டுகிறது. திருமறை மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதைக் காட்டுகிறது.”

எனவே திருமறையினூடாக ஆண்டவருடைய ஆலோசனை பெற்றுக்கொண்டு வாழ்வது மிக இன்றியமையாதது ஆகும். சங்கீதக்காரனாம் தாவீது குறிப்பிடும்போது கர்த்தர் நமக்கு போதிக்கிறவராகவும், வழிநடத்துகிறவராகவும், ஆலோசனை சொல்லுகிறவராகவும் குறிப்பிடுகிறார். எனவே இறை போதனையை கேட்பதும் அவர் வழி நடப்பதும், அவர் ஆலோசனைக்கு செவிசாய்ப்பது இன்றியமையாதது ஆகும்.

## போதிக்கும் ஆண்டவர்:-

உலகம் தனது வழியைப் போதிக்கிறது அது நிலையற்ற வழி. ஆனால் ஆண்டவர் நமக்கு போதிக்கும் வழி நிலைவாழ்வின் வழி. எனவே இதை உணர்ந்த தாவீது ராஜா சங்கீதம் 27:11-ல் ''கர்த்தாவே உமது வழியை எனக்குப் போதித்து என் எதிராளிகளினிமித்தம் செவ்வையான பாதையில் என்னை நடத்தும்'' என்று வேண்டுகிறார். கர்த்தருடைய வழியினால் நாம் போதிக்கப்பட்டு இருக்கவேண்டும்.

நமது பிள்ளைகளும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பது குடும்ப ஆசீர்வாதம் என ஏசாயா தீர்க்கர் குறிப்பிடுகிறார்.

''உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்'' ஏசாயா 54:13

பிள்ளைகளுக்கு மட்டுமன்றி அனைவரும் ''இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து அவரால் போதிக்கப்பட்டீர்களே'' (எபே. 4:21) என்று எபேசியத் திருச்சபைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார் எனவே போதிக்கும் ஆண்டவரின் போதனையைக் கேட்பது மிக இன்றியமையாதது ஆகும்.

## வழிகாட்டும் ஆண்டவர்:-

கூகுள் நிறுவனம் 2005-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ம் நாள் டேனிஷ் சகோதரர்களால் வடிவமைக்கப்பட்ட கூகுள் மேப் சாப்ட்வேர் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தது. இன்று 200 நாடுகளில் 1 பில்லியன் மக்களுக்கு மேல் பயன்பாட்டில் இருக்கும் இந்த வழிகாட்டும் சாப்ட்வேரை வைத்து நாம் செல்லும் பாதையின் வழியை காணலாம் என்பதுதான் உண்மை. ஆனால் ஆண்டவருடைய வழி காட்டுதல் என்பது இதற்கு மேலானது. நம்மைக் காட்டுகிறது, நமது வழியைக் காட்டுகிறது, நமது வாழ்வைக் காட்டுகிறது.

தாவீது ராஜா சங்கீதம் 31:3-ல் ''என் கன்மலையும் என் கோட்டையும் நீரே உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி என்னை நடத்தியருளும்'' என ஆண்டவரின் வழிகாட்டுதல் பாதுகாப்பு நிறைந்தது, உயர்வானது, உறுதியானது, உண்மையானது, உன்னதமானது என்பதை சுட்டிக்காட்டுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்று வரும்போது தேவனாகிய கர்த்தர் ''இரவும் பகலும் வழி நடக்கக்கூடும் படிக்கு கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சம் காட்ட அக்னிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்''

என்பதைக் காண்கிறோம். எனவே ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும், மனிதனுடைய வழிகாட்டுதலை விட கர்த்தருடைய வழி நடத்துதலே தேவையானது, இன்றியமையாதது. உன்னத பாதுகாப்பை தரவல்லது என்பதை உணர்ந்து பற்றிக்கொள்வோம்.

## ஆலோசனை சொல்லும் ஆண்டவர்:-

போதிப்பேன், வழிகாட்டுவேன் என்று இத்திருவசனத்தினூடாக பேசிய ஆண்டவர் ஆலோசனை சொல்லுவேன் என்று கூறுகிறார். சங்கீதம் 1:1 சொல்லுகிறது "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நில்லாதே" என்று. ஆலோசனை பல இடங்களிலிருந்து பல வழிகளில் வருகிறது. துவக்க காலங்களில் ஆலோசனைக்காரர்கள் என்று சிலர் இருந்தனர். பொதுவாக முதியோரின் ஆலோசனை அதிகமாக கேட்கப்பட்டது. "ஆலோசனை இல்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்து போவார்கள் அனேகம் ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்" நீதிமொழிகள் 11:14. ஆலோசனை அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

கர்த்தருடைய ஆலோசனை விலைமதிப்புள்ளவை, திருமறை கர்த்தருடைய ஆலோசனைக் குறித்து கூறும் வகையினை தாவீது ராஜா குறிப்பிடும் போது;

1. கண் வைத்து ஆலோசனை - சங்கீதம் 32:8
2. நித்திய காலமான ஆலோசனை - சங்கீதம் 33:11
3. இன்பமான ஆலோசனை - சங்கீதம் 55:14, சங்கீதம் 119:24
4. மகிமையின் ஆலோசனை - சங்கீதம் 73:24
5. அருமையான ஆலோசனை - சங்கீதம் 139:17
6. மெய்ஞானமுடைய ஆலோசனைகள் - நீதிமொழிகள் 8:14ல்

கூறப்படும் கர்த்தருடைய ஆலோசனைகளை தாவீது ராஜா புகழும்போது "எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன்" சங்கீதம் 16:17 என்று குறிப்பிட்டு ஆண்டவரைத் துதிக்கிறார்.

போதிக்கும் ஆண்டவரின் போதனையைக் கேட்போம், வழிநடத்தும் ஆண்டவரை பின்பற்றுவோம், ஆலோசனை தரும் ஆண்டவரின் பாதம் பணிவோம். இந்நாட்கள் முழுதும் இவ்வண்ணமே வாழ ஆண்டவர் அனைத்து ஆசிகளையும் நிறைவாய் தந்தருள்வாராக. ஆமென்.

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்.**

# இலக்கு (Goal)

இராஜபுரம் என்னும் சிற்றூரில் ராஜ அரண்மனையில் இராஜாங்கன் என்னும் இளவரசன் வாழ்ந்தான். அவன் பிறவியிலேயே உடலின் முதுகுப்பகுதி வளைந்து கூன் முதுகு உடையவனாக வாழ்ந்தான். தினமும் இருவேளை தவறாது செய்யும் உடற்பயிற்சியால் கூன் முதுகு நிமிர்ந்துவிடும் என்று அரண்மனை மருத்துவர்களால் போதிக்கப்பட்டான். அந்த போதனையில் அவனுக்கு எள்ளளவும் நம்பிக்கை இல்லை. எனவே வெளியிடங்களுக்கு வராமல் அறையிலேயே முடங்கி விட்டான். விரக்தியின் விளிம்பில் சென்றுவிட்ட அவன்தம் வாழ்வு அரசனையும் வேதனைக்குள்ளாக்கியது.

இந்த ராஜ அரண்மனையில் ஓர் மதி நுட்பங்கொண்ட மந்திரி ஒருவர் இருந்தார். இளவரசன் நிலையினை அறிந்ததோடு மட்டுமன்றி அரசனின் மன வேதனையையும் உணர்ந்தார். எனவே அரசனிடம் ஓர் ஆலோசனை கூறினார். அவ்வாலோசனையை அரசனும் அப்படியே ஏற்றுக்கொண்டு செயல்படுத்தத் துவங்கினான்.

மறுநாள் அழகிய உருவங்களைச் செதுக்கி சிலை அமைப்பதில் வல்லவரான சிற்பி ஒருவர் ராஜ அரண்மனைக்கு வரவழைக்கப்பட்டார். சிற்பியிடம் கூன் இல்லாத இளவரசனின் கெம்பீரமான சிலை ஒன்றை செதுக்கும்படி கட்டளையிட்டார். இந்த சிலை இளவரசனின் அறையில் நிறுவப்பட்டது.

கெம்பீரமான தோற்றம் கொண்ட இந்த சிலையை கண்ட இளவரசனால் நம்ப முடியவில்லை. இவ்வளவு அழகாக தன்னால் மாறமுடியுமா? என மனதுக்குள் எண்ணிக்கொண்டான் தன் வாழ்வில் ஓர் தீர்மானம் ஒன்றை எடுத்துக் கொண்டான்.

அன்றுமுதல் தவறாது உடற்பயிற்சிகளை மேற்கொண்டான், அரண்மனை மருத்துவர்களின் ஆலோசனை வழி நடந்தான். தன் முன் அழகாக நிறுத்தப்பட்ட வடிவமே அவன் இலக்காக மாறியது. முயற்சியும், நம்பிக்கையும் அவனுடைய வாழ்வின் இலக்கை அடைய வேண்டும் என வேகப்படுத்தியது. போதனையும், வழிகாட்டுதலும் ஆலோசனையும் அவனை இலக்குக்கு நேராய் நகர்த்திச் சென்றது. நாட்கள் சென்றன. அவன் தன்னை கண்ணாடியில் கண்டபோது அந்த சிற்பத்தைப்போல தானும் அழகாக மாறியிருப்பதை உணர்ந்தான். இலக்கை அடைந்தான்.

“நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்” - யோவான் 13:15.

நாமும் இயேசுவை முன்மாதிரியாக வைத்து முன்னேறுவோம். துல்லியமான,

உண்மையான நீதியாக கிறிஸ்து இயேசுவுக்குள் நமது இலக்குகளை நிர்ணயம் செய்து உழையுங்கள், தடைகளை தகர்த்து எறிந்து இறை இயேசுவை பின்பற்றுவோம், முன்னேறுவோம்.

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்.**

## பெண்கள் பகுதி

## பார்வோன் குமாரத்தி

### நல்ல தலைவனை உருவாக்கிய வளர்ப்புத்தாய் - யாத்திராகமம் 2: 1-11

விசுவாசத்துடன் மோசேயின் தாய் தன்னுடைய மூன்றுமாத பாலகனை கண்ணுறங்கா தேவனின் பாதுகாப்பில் ஒப்படைத்து நாணல் பெட்டியினுள் வைத்து நைல் நதியில் அலரிச்செடிகள் நடுவே வைத்தாள். அப்போது சர்வ அதிகாரியான பார்வோனின் குமாரத்தி ஸ்நானம் பண்ணவந்தாள். அவளுடைய தாதியர்கள் நதியோரம் உலாவினார்கள். அப்போது நாணல் பெட்டியில் குழந்தையைக் கண்டு அக்குழந்தையை வளர்க்க, தமக்கை என அறியாது எபிரேயத் தாயை, குழந்தையை வளர்க்க அழைத்து வரவா என்பதை அப்படியே ஒப்புக் கொண்டு தனக்காக குழந்தையை வளர்க்க ஆணையிட்டாள்.

பார்வோன் குமாரத்தியின் இரக்கம், வளர்க்க கட்டளையிடுதல், தொடர்ந்து தன் குமாரனாகவே ஏற்றுக்கொள்ளும் தன்மை, இவையாவும் இஸ்ரவேல் ஜனங்களை மீட்க இறை திட்டப்படி நல்ல தலைவன் உருவாக வழிவகை செய்தது. இவற்றை ஆய்வோம்.

### 1. வாழ்வில் இரக்கமுற்றாள்

நாணலுக்குள்ளே பெட்டியை கண்ட பார்வோன் குமாரத்தி தாதியரை அனுப்பி அதை எடுத்துக்கொண்டு வரும்படி செய்தாள். அதைத் திறந்தபோது ஆண் பிள்ளையை கண்டாள், பிள்ளை அழுதது. அழும் குழந்தையைக் கண்ட பார்வோன் குமாரத்தி பிள்ளையின் மீது இரக்கமுற்றாள் என காண்கிறோம். இது எபிரேயப் பிள்ளைகளில் ஒன்று என்று அறிந்த பின்னும் அவள் அக்குழந்தையின் மீது இரக்கமுற்றாள். பிறக்கும் ஆண் குழந்தைகள் எல்லாம் கொல்லப்பட வேண்டும் என்ற கட்டளையை ஒரு ராஜ குமாரத்தியாக அறிந்திருந்தாலும் அவள் தன் உள்ளத்தில் குழந்தைமீது கொண்ட இரக்கம் நல்ல தலைவனை உருவாக்கிற்று எனலாம்.

இயேசு நாதரின் மனதுருக்கமும் இரக்கமும் அநேக மக்களுக்கு வாழ்வு கொடுத்தது. எங்கெல்லாம் மக்கள் கடினப் பட்டார்களோ அங்கெல்லாம்

இயேசு கிறிஸ்து மனதுருகி தொட்டு சித்தமுண்டு சுத்தமாகு என்று விடுதலை அளித்தார். மக்கள் வாழ்வு பெற்றார்கள் இஸ்ரவேல் ஜனங்களின் வாழ்வுக்கு யாத் 2:7ல் பார்வோன் குமாரத்தியின் இரக்கம் வழியாய் அமைந்தது.

## 2. வளர்க்க கட்டளையிட்டாள்

எபிரேய ஆண் குழந்தைகள் வளர்க்கக் கூடாதிருந்த சூழலில் கண்டெடுத்த எபிரேய ஆண் குழந்தையை வளர்க்கக் கட்டளையிட்டாள். குழந்தையின் சகோதரி பார்வோன் குமாரத்தியிடம் உமக்கு இந்த பிள்ளையை வளர்க்கும்படி எபிரேய பெண்களில் பால் கொடுக்கிற ஒருத்தியை நான் போய் உம்மிடத்தில் அழைத்துக் கொண்டு வரட்டுமா? என்ற கேள்விக்கு, அழைத்துக் கொண்டுவா என்று பதிலைக் கூறினாள். அவள் தம் உள்ளத்தில் பிள்ளையை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியிருந்ததைக் காணலாம். இந்தப் பெண் போய் பிள்ளையின் தாயையே அழைத்து வந்தாள். அத்தாயிடம் பார்வோன் குமாரத்தி “நீ இந்த பிள்ளையை எடுத்துக்கொண்டு போய் அதை எனக்கு வளர்த்திடு நான் உனக்கு சம்பளம் கொடுக்கிறேன்”என்றாள் (யாத் 2:9).

மோசே என்னும் குழந்தை தன் தாயிடம் பாதுகாப்பாக வளர்க்கபட பார்வோன் குமாரத்தியை கர்த்தர் கருவியாகப் பயன்படுத்தினார் என்பதே உண்மை.

## 3. வளர்ந்த பின் ஏற்றுக்கொண்டாள்

யாத்திராகமம் 2:10-ல் காணும்போது வளர்ந்த பிள்ளையாக இக்குழந்தை காட்டப்படுவதைக் கண்டுகொள்ள இயலுகிறது. ஆனாலும் பார்வோன் குமாரத்தி வளர்ந்த எபிரேய குழந்தைக்கு பெயர் சூட்டுகின்றாள் “தண்ணீரில் இருந்து எடுக்கப்பட்டவன்” என்னும் பொருள் கொண்ட “மோசே” என்ற பெயரை சூட்டியதோடு குமாரனாய் ஏற்றுக்கொண்டாள் என்று திருமறை சுட்டிக் காட்டுகிறது.

மோசே பார்வோன் குமாரத்தியின் மகனாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட படியால் அந்நாட்களில் சாஸ்திரங்களும், கலைகளும் அவனுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. வாக்கிலும் வல்லமையிலும் வல்லவனாகின்ற வாய்ப்பு கிடைத்தது. நல்ல தலைவன் உருவாகக் காரணமாக அமைந்தது. இஸ்ரவேல் மக்களின் விடுதலை வரலாற்றின் அடித்தளமாய் ஆண்டவர் பயன்படுத்திய பாத்திரங்களில் ஒன்று பார்வோன் குமாரத்தி என்பதை திருமறை சார்ந்த நம்மால் மறுக்கமுடியாது.

உயர்வின் தனது நிலையில் பிறரைப் பார்க்கும் போதும் இயலாமையிலும் வாழும் மக்களைப் பார்க்கும் போதும் இரக்கமும் வாழ்வும் அளிக்கும்

குணம் நமக்குவேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாய் அமைகிறது. உயர்வின் சூழலிலும் மேன்மை பெற்றிருக்கும் நாட்களிலும் ஆண்டவருடைய பாத்திரமாக மனத்தாழ்மையும், மனதுருக்கத்தையும், அர்ப்பணத்தையும் நமது அணிகலன்களாக் கொள்வோமே என்றால் கர்த்தர் நம்மையும் பயன்படுத்துவார், பல மக்களின் விடுதலை வாழ்வுக்கு கருவிகளாக்குவார் என்பதில் சந்தேகமில்லை. உணர்ந்து செயல்பட ஆண்டவர் அருள் புரிவாராக.

பெண்கள் சங்கத்தின் சார்பில் அனைவருக்கும் எனது அன்பான வாழ்த்துக்களும் வணக்கங்களும்.

**அன்புடன் பெண்கள் சங்கதலைவி,**
**திருமதி. D. ஷர்மிளா ஜெசின்.**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள் ~ வில்லியம் கௌடி

### துன்பத்திலும் ஆசீர்வதியுங்கள்

**மண்ணில்** : **06.05.1857**
**விண்ணில்** : **09.04.1922**
**ஊர்** : **சென்னர்விக்**
**நாடு** : **ஸ்காட்லாந்து**
**தரிசன பூமி** : **இந்தியா**

இறைப்பற்றுமிக்க அன்னையின் அரவணைப்பில் அற்புதமாக வளர்ந்தவர் வில்லியம் கௌடி. தந்தை ஒரு இறை பணியாளர்.

1882-ம் ஆண்டு இந்தியாவிற்கு மிஷனெரியாக வந்தார். சென்னையில் ஜார்ஜ் டவுண் மற்றும் புனித தாமஸ் மலையின் வெஸ்லி சபைகளில் பணிபுரிந்தார்.

1883-ம் ஆண்டு திருவள்ளூர் பகுதியில் தன் ஊழியத்தை ஆரம்பித்தார். ஏழைகளின் மீது பரிவு கொண்டு தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்ட தலித் மக்கள் மீது பாசம் கொண்டார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் சுவிசேஷம் சொன்ன போது உயர்ஜாதி மக்கள் கற்களையும், நாற்றமடிக்கும் சேற்றையும் அவர்மீது அள்ளி வீசினர். கல்லெறிந்த மக்களைப் பார்த்து, "நீங்கள் என் மீது கல்மழை பொழிந்தீர்கள்" ஆனால் ஆண்டவர் உங்களுக்கு அரிசி மழையைப் பொழிவார்" என்று அவர்களை ஆசீர்வதித்தார். அப்போது அப்பகுதி மிகுந்த பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நிலப்பிரபுக்களால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த ஏழை மக்களை விடுவித்தார். அவர்களின் நிலங்களை அவர்களுக்கே திரும்ப கிடைக்கும்படி செய்தார். ஆண்களுக்கு தனியாகவும், பெண்களுக்கு தனியாகவும் பள்ளிகளை ஏற்படுத்தினார். விடுதிகளும் ஏற்படுத்தப்பட்டது. ஈக்காடு என்ற கிராமம் கௌடியால் செழிப்பைப் பெற்றது. கடும் பிரயாசத்தின் பலனாக ஈக்காட்டில் வெஸ்லி ஆலயத்தையும் கட்டினார்.

முதல் உலகப்போரில் தன் மகன்கள் இருவரை இழக்கக் கொடுத்தும், சோர்ந்து போகாமல் தன் கடைசி மூச்சுவரை இந்தியர்களுக்காகவே வாழ்ந்த கௌடி உலகிற்கு ஓர் வரப்பிரசாதம்.

அன்பரே! உங்களை பகைக்கிறவர்களுக்கும் நன்மை செய்கின்றீர்களா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு** : என் மீது கல்மாரி பொழிந்த இந்த ஈக்காடு கிராமத்தில் ஆண்டவருக்கென ஒரு கற்கோட்டையை நான் கட்டுவேன் - வில்லியம் கௌடி

**குயவனின் கரங்களில்** : ஆண்டவரே! என்னை துன்ப படுத்துகிறவர்களுக்கும் நன்மை செய்து உமக்குள் வழிநடத்த உதவியருளும்.

**தியானத்திற்கு** : உபாகமம் 23, உன்னதப்பாட்டு 3, அப்போஸ்தலர் 16-17

## நிகழ்வும் ~ பாடமும்



## காலபந்து வீரரும் - வெற்றியும்

பிலே என்பவர் பிரேசில் நாட்டு கால்பந்து வீரர்.
உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியின் முதல் பகுதியில் எந்த அணியும் ‘கோல்’ போடவில்லை. இரண்டாவது பகுதியில் பிலே ‘கோல்’ அடித்தார். அது கம்பியில் பட்டு திரும்பியது. ஏன் உங்களால் ‘கோல்’ போஸ்ட்டுக்குள் அடிக்க முடியவில்லை அரை இஞ்ச்தானே என கேட்டதற்கு, பிலே “கோல் போஸ்ட் அரை இஞ்ச் உள்ளே தள்ளியிருக்கிறது என்றார்” ஆய்வில் அவர் சொன்னது சரியாகவே இருந்தது.

வெற்றி, பெறுவதற்கு தடை பெரிதல்ல தனது முயற்சியே பெரிது என்பதை சுட்டிக்காட்டும் நிகழ்வு.

சங்கீதம் 119:105 “உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது”

# தேவப்பிதா எந்தன் மேய்ப்பனல்லோ

**சங்கீதம் : 23**

**பாடல் : த. யோசேப்பு**
**ராகம் : த. யோசேப்பு**

**பல்லவி**

தேவ பிதா எந்தன் மேய்ப்பனல்லோ?
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே.

**அனுபல்லவி**

ஆவலதாய் எனைப் பைம்புன் மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார்

**சரணங்கள்**

1. ஆத்துமந் தன்னைக் குளிரப் பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்.

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும்
சற்றும் தீங்குக் கண்டஞ்சனே;
வானபரன் என்னோடிருப்பார்,
வளை தடியும் கோலுமே தேற்றும்.

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்தி
சுக தயிலம் கொண்டென் தலையைச்
சுகமாய் அபிஷேகம் செய்குவார்.

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன்.

தென்னிந்திய திருச்சபையின் திருச்சி – தஞ்சை திருமண்டல மிஷனரி பணித்தளமாக, திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சை மலை விளங்குகிறது. இப்பணித்தளத்தின் ஊழிய தரிசனத்தை முதலாவது பெற்றவர், “கொல்லி மலை மிஷனரி” என அழைக்கப்படும் ஆங்கிலேய மிஷனரி, ஜெசிமன் பிராண்ட் ஆவார். இவர் குஷ்டரோகிகளுக்கு அறுவை சிகிச்சை

முறைகளைக் கண்டுபிடித்த, உலகப் பிரசித்தப் பெற்ற மருத்துவ மேதையும், வேலூர் சி.எம்.சி மருத்துவ மனையின் முன்னாள் இயக்குனருமான டாக்டர் பால் பிராண்டின் தந்தையாவார்.

தமிழைக் கற்று, கொல்லிமலை ஊழியத்துக்கு தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த ஜெசிமனுக்கு பிடித்த பாடல், தன் தாய்மொழியான ஆங்கிலத்திலல்ல. தமிழில் உள்ள ''தேவபிதா'' என்ற இப்பாடலே. தனது 43-வது வயதிலேயே, அவர் கொல்லிமலையின் விஷக்காய்ச்சலால் மரித்த போது, அவர் அடிக்கடி விரும்பிப் பாடிய இப்பாடலையே, அவரது அடக்க ஆராதனையில், அம்மலை மக்கள் பாடினார்கள்.

இவ்வாறு, வெளிநாட்டுத் தேவ ஊழியர்களையும் கவர்ந்த இப்பாடல், கிட்டத்தட்ட இந்தியாவின் அனைத்து முக்கிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. இன்றும், இந்தியாவின் வடமாநிலங்களில் நடைபெறும் மிஷனரிப் பணிகளில், பல ஆதிவாசி மொழிகளில் மொழிப் பெயர்க்கப்பட்டுப் பாடப்படும் முதல் பாடலாக, இப்பாடல் விளங்குகிறது. தமிழகத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் கீர்த்தனைகளில், மிகச் சிறந்ததாக இப்பாடல் கணிக்கப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட புகழ்பெற்ற இப்பாடலை எழுதியவர், கன்னியாகுமரி மாவட்டம் நெய்யூரைச் சேர்ந்த யோசேப்பு ஆவார். தன் இளமை பருவத்திலேயே தன் உடன் பிறந்தோரையும், தன் தந்தையையும் இழந்த அவர், பின்னர் தன் தாயையும் இழந்து அனாதையானார். இந்நிலையில், தன் பரம பிதாவையே நம்பி வாழ்ந்த யோசேப்பு, அவரை உரிமையோடு, ''தேவபிதா'' என அழைத்து, இப்பாடலை எழுதியிருக்கிறார்.

இப்பாடலின் முக்கியத்துவம் என்னவெனில், இதில் அடிப்படையான 23-ம் சங்கீதம், பலவித சூழ்நிலைகளிலும் உபயோகிக்கப்படுவது போல, இப்பாடலிலும் திருமணம் போன்ற சந்தோஷ நிகழ்ச்சிகளில், தேவ அருளைப் பெறவேண்டிப் பாடுவதற்கும், திகிலுற்ற வேளைகளில் அடைக்கலப் பாடலாகப் பாடுவதற்கும், துயருற்றுக் கலங்கி நிற்கும் வேளைகளிலும், அருமையானவர்களை இழந்து தவிக்கும் வேளைகளிலும் ஆறுதல் பெற பாடுவதற்கும் ஏற்ற தகுதி நிறைந்ததாக விளங்குகிறது.

எனவே, இப்பாடல், பலதரப்பட்ட மக்களும், பற்பல மொழிகளில், இவ்வுலக வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளிலும், நிகழ்ச்சிகளிலும். விரும்பிப் பாடும் சிறப்புப் பாடலாகத் தனிச்சிறப்பு பெற்றிருக்கிறது.

**பாடகர் குழு – CSI Tamil Church – Oman**

**(நன்றி – அமைதி நேர ஊழிய வெளியீடு)**

# ஆண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – ஜூன் 2019

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

ஆண்டவரின் மகா கிருபையால் நமது சபையின் ஆண்கள் சங்கமானது 20-06-2019 அன்று இரவு 9 மணிக்கு புதிய போதகர் Rev. Dr. N. ஜெசின் அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பமானது.

பின்பு சங்க செயலர் வரவேற்புரை வழங்கினார்கள். சகோதரர் தன்ராஜ் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள். சங்க உறுப்பினர்கள் கரஓசை எழுப்பி மகிழ்ச்சியோடு புதிய போதகர் Rev. Dr. N. ஜெசின் அவர்களை அன்புடன் வரவேற்றார்கள். கூட்டம் போதகரால் ஜெபித்து துவங்கப்பட்டது. பின்பு ஆவிக்குரிய பாடல்கள் பாடப்பட்டு போதகர் அவர்களால் நன்றி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து போதகர் அவர்கள் தலைமை உரையை வழங்கினார்கள். லூக்கா 17-ம் அதிகாரத்தை மையமாக வைத்து பத்து தொழுநோயாளிகளை குறித்து அருமையாக விளக்கினார்கள். அதில் ஒருவன் தான் ஆரோக்கியமானதை கண்டு திரும்பி வந்து ஆண்டவருடைய பாதத்தில் முகங்குப்புற விழுந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தினான். நாமும் பெற்ற நன்மைகளுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்தி சாட்சியாய் வாழ வேண்டும் என்னும் கருத்து மையப்பொருளாக அமைந்தது.

பின்பு நகமானின் தொழுநோயைக் குறித்தும் அவனுடைய அடிமைப் பெண்ணின் சாட்சியைக் குறித்தும்:

1. நாகமானின் பெருமையும் அகந்தையும்,
2. நாகமான் ஊழியக்காரருடைய வார்த்தைக்கு கீழ்படிந்தான்.

இவைகளைக் குறித்து 2 இராஜாக்கள் 5-ம் அதிகாரம் வாசிக்கப்பட்டு சகோதரர் தன்ராஜ் அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள்.

இதில் அற்புதம் என்னவென்றால் சகோதரர் தன்ராஜ் அவர்களும் தொழுநோயாளிகளைக் குறித்து செய்தியை ஆயத்தப்படுத்தினதுதான். பழைய ஏற்பாட்டில் எத்தனை தொழுநோயாளிகள்? புதிய ஏற்பாட்டில் எத்தனை தொழுநோயாளிகள்? என்ற கேள்வியை முன் வைத்து செய்தியை வழங்கினார்கள்.

போதகர் மற்றும் சகோதரர் தன்ராஜ் இருவருமே வழங்கிய செய்தி, தொழுநோயாளிகள் ஆண்டவருடைய பாதத்தில் முகங்குப்புற விழுந்தார்கள் என்பதே. ஒருவன் குணமடைந்து நன்றி செலுத்த, இன்னொருவன் குணமடைய முகங்குப்புற விழுந்தான் என்னும் ஒப்பீடு சிறப்பாக அமைந்தது.

செய்தி முடிந்ததும் ஜெபக்குறிப்புக்காக ஜெபிக்கப்பட்டது, தொடர்ந்து சபைக்காக சபை போதகர்களுக்காக குடும்பங்களுக்காக ஜெபிக்கப்பட்டது. 11 மணியளவில் கூட்டம் நிறைவடைந்தது, அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது. இந்த மாதம் தங்கள் பங்களிப்பை வழங்கியவர்கள் **திரு. ஜினோ ஜான்** மற்றும் **திரு. ஷாஜு,** இரவு உணவை கொடுத்து உதவியவர்கள் **திரு. ஞானதாஸ், திரு. கண்ணன்.** அருமையான ஆண்டவருடைய பிள்ளைகளுக்கு ஆண்கள் சங்கம் சார்பில் நன்றி கூறுகிறேன். திருச்சபை குடும்பங்களாக தரும் அனைத்து ஒத்துழைப்புக்கும் பங்களிப்புக்கும் நன்றி. தொடர்ந்து திருச்சபையின் ஆண்கள் அனைவரும் ஆண்கள் ஐக்கிய சங்க கூறுகையில் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச்செல்ல அன்புடன் அழைக்கிறோம்.

**திரு. ஆ. சைலஸ்**
**ஆண்கள் ஐக்கிய சங்க செயலர்**

## பெண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – ஜூன் 2019

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள். ஜூன் மாத பெண்கள் சங்க கூடுகை ஜூன் மாதம் 20-ம் தேதி, C.S.I மலையாளம் ஹாலில் வைத்து இரவு 9:10 மணிக்கு திருமதி. அஸ்பின் பிஜோ அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பமானது. ஆவிக்குரிய பாடல்கள் பாடி தேவனை துதித்த பின்னர், திருமதி. ஷீபா சுஜித் அவர்கள் ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுத்தார்கள்.

அதன்பின் திருமறைப்பாடமாக சங்கீதம் 32:1-11 வசனங்கள் வாசிக்கப்பட்டு, திருமதி. நிஷா புரூஸ்வெல்ட் அவர்கள், **"யார் பாக்கியவான்"** என்ற தலைப்பில் கீழ்க்கண்ட குறிப்புகளில் வேத வசனங்களோடும், வேத எடுத்துக்காட்டுகளோடும் நல்லதொரு செய்தியை அளித்தார்கள்.

1. கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷன் பாக்கியவான்.
2. கர்த்தர்மேல் நம்பிக்கை வைக்கிற மனுஷன் பாக்கியவான்.
3. பாவங்களை அறிக்கையிடுகிற மனுஷன் பாக்கியவான்.

தேவசெய்தி அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது. அவர்களுக்கு பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பின்னர் திருமதி. தாமரி ஜாண்சன் அவர்கள் ஜெபக்குறிப்புகளை பகிர்ந்து கொள்ள, அந்த குறிப்புகளுக்காக ஊக்கமான ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

பின்னர் நமது சபையின் புதிய போதகர் Rev. Dr. N. ஜெசின் அவர்களை,

பெண்கள் சங்கத்தின் செயலர், பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் வாழ்த்தி வரவேற்றார்கள். போதகர் அவர்கள், இயேசு குணமாக்கின பத்து குஷ்டரோகிகளின் சம்பவத்தை மையமாகக் கொண்டு கீழ்க்கண்ட குறிப்புகளில் நல்லதொரு செய்தியை அளித்தார்கள்.

1. ஆண்டவரிடம் விண்ணப்பம் ஏறெடுக்க வேண்டும்.
2. ஆண்டவர் செய்த நன்மைகளுக்கு, நன்றி செலுத்தவேண்டும்.
3. ஆண்டவர் செய்த நன்றியை மறவாமல், ஆண்டவரை மகிமைப்படுத்த வேண்டும்.

அதன் பின்பு சாட்சி வேளையில் சிலர் கர்த்தர் தங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை சாட்சியாக பகிர்ந்து கொண்டார்கள். பின்னர் நிறைவு ஜெபம், போதகர் அவர்களால் ஏறெடுக்கப்பட்டு இறையாசி வழங்கப்பட்டது. பெண்கள் சங்கமானது இரவு 11 மணியளவில் இனிதே நிறைவுப்பெற்றது. இறுதியில் ஸ்பான்சர் செய்த **திருமதி. வனிதா ராணி பிரின்ஸ்** மற்றும் **திருமதி. அஸ்பின் பிஜோ** அவர்கள் சார்பில் சிற்றுண்டி வழங்கப்பட்டது. அவர்கள் குடும்பங்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இனிவரும் நாட்களில் சபையின் பெண்களாகிய நாம் அனைவரும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்று செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி. சாரா ராஜாசிங்,**
**பெண்கள் ஐக்கிய சங்க செயலர்**

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ ஜூலை 2019

| | | |
|---|---|---|
| 05-07-2019 | முதலாம் வேதபாடம் | Mrs. Sathya Priya Ramesh |
| | இரண்டாம் வேதபாடம் | Mr. Berkins |
| 12-07-2019 | முதலாம் வேதபாடம் | Mrs. Sheeba Sujith |
| | இரண்டாம் வேதபாடம் | Mr. David Sundar Singh |
| 19-07-2019 | முதலாம் வேதபாடம் | Mrs. Sujatha Shalini Jino |
| | இரண்டாம் வேதபாடம் | Mr. Dhanaraj |
| 26-07-2019 | முதலாம் வேதபாடம் | Mrs. Sumathi Jones |
| | இரண்டாம் வேதபாடம் | Mr. Dinakaran |
| 02-08-2019 | முதலாம் வேதபாடம் | Mrs. Sumi Vinobha |
| | இரண்டாம் வேதபாடம் | Mr. David Prabhakaran |

## 1) ஞானத்தைத் தேடுவோம்:-

"கர்த்தர் ஞானத்தை தருகிறார், அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்."

சர்வ லோகத்தையும் படைத்த இறைவனே ஞானத்தை மனிதனுக்குத் தருகிறவர். இறை போதனை அறிவையும், புத்தியையும் தரும். இறைவன் பட்சபாதமின்றி அனைத்துலக மக்களுக்கும் அறிவும், புத்தியும் அருளுகின்ற கிருபை நிறைந்த வார்த்தைகளைத் தருகிறார். இறை வார்த்தை சத்தியமானது. அது மனிதனை உயிர்ப்பிக்கிறது. இறைவனின் வாயிலிருந்து தோன்றிய இவ்வார்த்தை இவ்வுலகை உருவாக்கிற்று. இஸ்ரவேல் ஜனங்களை அடிமைதனத்திலிருந்து மீட்டு பத்துக் கற்பனைகளைக் கொடுத்து இறை ஞானத்தோடு ஜனங்கள் வழி நடக்க உதவி செய்தது. இந்த அறிவு நிறைந்த வார்த்தைகள் ஆசாரியர்கள், தீர்க்கர்கள் வழி மக்களுக்கு கிடைத்தது. அதன்படி மக்கள் இறை வார்த்தையைப் பெற்று நீதி நேர்மையாய் வாழ்ந்தார்கள். இறைவனிடமிருந்து வரும் ஞானம் இவ்வுலக வாழ்விற்கும் தேவையானது ஆகும்.

இன்றைய சூழலில் பல ஏற்ற தாழ்வுகள் நிறைந்த சமய சமூக பொருளாதார அரசியல் நிலைகளில் மிகுந்த ஞானத்துடன் நடப்பது தேவை. மோசே, யோசுவா, எலியா, தாவீது, யோசியா இவர்களெல்லாம் இறை ஆலோசனைக்கு காத்திருந்து இறை போதனை பெற்று அவ்வழி நடந்தார்கள். சோதனைகளை ஜெயித்தார்கள். சாதனைகளைப் படைத்தார்கள்.

வளர்ந்து வரும் யுகத்தில் "மாற்ற முடியாதவற்றை ஒத்துக்கொள்ளும் சாந்தத்தையும், மாற்றக் கூடியவற்றை மாற்றும் வலிமையையும், வேறுபாடுகளைப் பிரித்தறிந்து தெரியக்கூடிய ஞானத்தையும் இறைவா தந்தருளும்" என்று றெயின் கோல்டு நெய்பர் ஜெபித்தது போல நாமும் இறைவனை நோக்கி ஜெபித்து இறை வாயிலிருந்து வரும் ஆலோசனைகளை பெற்று முன்னேறுவோம். இறைஞானம் மனித வாழ்வை பூரணப்படுத்தும்.

## 2) பொன்னை விட சிறந்தது ஞானம்:-

"முத்துக்களைப் பார்க்கிலும் ஞானமே நல்லது. இச்சிக்கப்பட தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல"
"ஞானத்தின் ஊற்றானவர் ஆண்டவர்" (நீதி 2:6) என்கிறார் நீதிமொழிகள் ஆசிரியர் சாலமோன் ஞானி. இவர் தனது நூலில் வெள்ளி, பொன், பவளம்

இவைகளை விட ஞானமே உயர்ந்தது வெள்ளியை விட ஞானமே நல்லது" (நீதி 3:14), பொன்னை விட ஞானத்தால் வரும் செல்வம் மேலானது (நீதி 3:14), பவளத்தை விட விலைமதிப்புள்ளது ஞானம் (நீதி 3:15) என விளக்கி கூறியுள்ளார். அதோடு ஞானத்தைத் தேடி பெறுவோர் நற்பேறு பெற்றவர்கள் (நீதி 3:13) எனவும் சொல்லித் தந்துள்ளனர். இந்த ஞான உரைகள் அனைத்தும் சாலமோன் அரசர் தனது வாழ்வின் அனுபவத்திலிருந்தே சொல்லியுள்ளார்.

இஸ்ரவேல் நாட்டின் மூன்றாவது அரசராக அருள்பொழிவு செய்யப்பட்ட சாலமோன் அரசர் கடவுளிடம், நீடிய ஆயுளையோ, செல்வத்தையோ, எதிரிகளின் சாவையோ, எதிரிகளின் வாய் அடைப்பையோ விரும்பி கேட்காமல் ஞானத்தை மட்டும் கேட்டார். கடவுள் சாலமோனுக்கு, அவருக்கு முன்னும் அவருக்குப் பின்னும் அவரைப் போல ஞானத்தில் உயர்ந்தவன் இருக்கப் போவதில்லை என்னும் அளவிற்கு ஞானமும் பகுத்தறிவும் நிறைந்த உள்ளத்தை வழங்கினார்.

ஞானத்தில் குறைவுள்ளவன் யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கின்ற இறைவனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனத் திருமறைத் தெளிவுபடுத்துகிறது. ஆனால் மனிதனோ தனது சுயபுத்தியின் மேல் சாய்ந்து வாழ்வதை தெளிவாக காணமுடிகிறது. அதோடு இன்றைய உலகம் பொன்னைத் தேடி ஓடுகிறது. வெள்ளியை நாடி தேடுகிறது. ஆனால் ஞானத்தை விரும்பித் தேடுவதே இல்லை. எனவே ஆண்டவரிடம் அச்சம் கொண்டு அவரைத் தேடி ஞானத்தை பெற்றுக் கொள்ளும் குறிக்கோளோடு வாழ்வோம்.

### 3. ஆண்டவருக்கு பயந்து நடப்போம்:-

"கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்"

இளம் பருவத்தில் உள்ளத்தில் பய உணர்வுகள் இன்றி எதையும் சந்திக்கும் துணிவு வருவது இயல்பு, "இளங்கன்று பயமறியாது" என்பது பொதுமொழி. எதைக் குறித்தும் பயமற்று வாழாது, இறைப் பயத்தோடு வாழ்வது ஞானத்தின் துவக்கம்.

நீதிமொழிகள் நூல், "கடவுளுக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என ஆரம்பித்து, சமய ஒழுக்கம், நல்லறிவு, நன்னடத்தை பற்றி விளக்கி கூறுகின்றது. பலவித பயங்கள் மனிதனைப் பின் தொடர்கிறது. நோய் கண்டால் பயம், தேர்வுகளை நினைத்தால் பயம், எதிரி மற்றும் எதிர்ப்புகளை கண்டால் பயம் போன்ற பல காரணிகளால் மனிதர்கள் பயந்து வாழும்போது கடவுளுக்கு பயப்படுதல் மிக முக்கியத்துவம் பெறுதல் வேண்டும்.

வாழ்வின் உயர்நிலைகளுக்கு அடிப்படை ஞானமே, ஞானத்தின் உறைவிடமாகிய இறைவனுக்கு அஞ்சி நடப்பதுதான் ஞானத்தின் துவக்கம். தங்களை ஞானமுள்ளவர்கள் என உயர்வாக மதிப்பிடும் சமூகத்தில், இறைத்தொழுகை, இறைபயம் மறக்கப்பட்டு உலக கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இன்றையச் சூழலில் இறைபயம்தான் ஞானத்தின் துவக்கம் எனும் உணர்வு எப்பொழுதும் நம்மில் இருப்பது மிக முக்கியமானதாகும். சங் 111:10, நீதி 9:10 ஆகிய வசனங்களும் இதையே உணர்த்துகின்றன.

ஞானத்தை அவமதிப்பவரும், இறைவனுக்குப் பயப்படாதவரும் மூடரே என இப்பகுதி நமக்கு உணர்த்துகிறது. இன்றைக்கு அநீதிகள், அக்கிரமங்கள், ஒழுக்கக்கேடுகள் நிறைந்த இவ்வுலகில் நேர்மையாய் இறைஞானத்துடன் வாழ முற்படுவோம். இறைபயத்துடன் வாழ்வோம். இறைஞானம் பெற்று வாழ்வில் மேன்மை காண்போம்.

**- V.G. மஹிழா ஜெங்கின் ராஜ்**

## ஆண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 61




**ஜுலை 2019 மாத கேள்விகள்**

**(1 நாளாகமம் 13 - 22 வரை)**

1. சகல ஜனங்களுக்கும் செம்மையாயிருந்த காரியம் எது?
2. தேவனுடைய பெட்டியை யாருடைய வீட்டிலிருந்து எப்படிக் கொண்டு வந்தார்கள்?
3. ஓபேத் ஏதோமின் வீட்டில் கர்த்தருடைய பெட்டி எத்தனை காலம் இருந்தது?
4. பெலிஸ்தர்கள் உடைந்து ஓடின இடத்திற்கு என்ன பெயரிடப்பட்டது?
5. பெலிஸ்தர்கள் விட்டு ஓடின தெய்வங்களை என்ன செய்தார்கள்?
6. தேவனுடைய பெட்டியை சுமக்க தெரிந்து கொண்டவர்கள் எப்படி தங்களை ஆயத்தம் பண்ணினார்கள்?
7. கெனானிய என்பவர் யார்?
8. தாவீது செலுத்திய பலிகள் எவை?
9. கர்த்தருடைய சமூகத்தை எப்பொழுது தேடவேண்டும்?
10. வாசல் காக்கிறவர்களாக தாவீது யாரை ஏற்படுத்தினான்?
11. தேவன் உம்மோடு இருக்கிறார் என்று தாவீதிடம் கூறியது யார்?
12. தாவீதை தேவன் எதற்காக தெரிந்து கொண்டார்?
13. தாவீது கர்த்தருக்கு பரிசுத்தம் என நேர்ந்து கொண்ட பொருட்கள் எவை?

14. யார் தனக்கு தயவு செய்தது போல செய்வேன் என தாவீது கூறினான்?
15. சீரியர் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிந்து ஓடும் போது கொல்லப்பட்ட இரதங்களின் மனுஷர்களின் எண்ணிக்கை?
16. காத்திலேயுள்ள நெப்டையான தொடயைனா மனுஷனுக்கு எத்தனை விரல்கள்?
17. இஸ்ரவேலை தொகையிட தாவீதை ஏவியது எது?
18. ஞானதிருஷ்டிக்காரன் காத்துடன் கர்த்தர் தாவீதுக்கு விரோதமாய் பேசின மூன்றுகாரியங்கள் எவை?
19. இஸ்ரவேலில் கொள்ளை நோயால் அழிந்த மக்கள் தொகை எவ்வளவு?
20. கர்த்தருடைய ஆலயம் கட்டப்பட் நான்கு திசையிலிருந்து தேவனால் தரப்பட்டது எது?

## ஜுன் 2019 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. சேலோமீத் - 1 நாளாகமம் 3:19
2. 33 வருஷம் - 1 நாளாகமம் 3:4
3. 4 பேர் - 1 நாளாகமம் 4:42
4. மெல்லிய புடவை நெய்தல் - 1 நாளாகமம் 4:21
5. கீழேயாத்தில் - 1 நாளாகமம் 5:16
6. யோவேல் - 1 நாளாகமம் 5:11,12
7. கலிலேயாவில் - 1 நாளாகமம் 6:76
8. ஆரோனும் அவன் குமாரரும் - 1 நாளாகமம் 6: 49
9. பேரேஸ், சேரேஸ் - 1 நாளாகமம் 7: 16
10. 26 ஆயிரம் பேர் - 1 நாளாகமம் 7: 40
11. கிபியோனில் - 1 நாளாகமம் 8:29
12. ஊலாமின் குமாரர் - 1 நாளாகமம் 8:40
13. சல்லுமின் மூத்த குமாரனிடம் - 1 நாளாகமம் 9:31
14. சல்லும், அக்கூப், தல்மோன்& அகிமான் - 1 நாளாகமம் 9:17,26
15. சவுலின் ஆயுததாரி - 1 நாளாகமம் 10:5
16. கர்த்தர் - 1 நாளாகமம் 10:13,14
17. சீயோன் கோட்டை - 1 நாளாகமம் 11:5
18. பெனாயா - 1 நாளாகமம் 11:24
19. யுத்தமனுஷர் எல்லாரும் - 1 நாளாகமம் 12:38
20. ஏரோகாம் - 1 நாளாகமம் 12:7

## ஜுன் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. David Prabakar | Mr. Johan Pratheep |
| Mr. Jean | Mr. Ramesh |
| Mr. Jino John | Mr. Robin Devadhas |

## பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 76




### ஜுலை 2019 மாத கேள்விகள்

### (சங்கீதம் 23 - 32 வரை)

1. என்னைத் தேற்றும் உபகரணங்கள் எவை?
2. யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்?
3. யார் வெட்கப்பட்டு போவார்கள்?
4. என் கால்களை எவைக்கு நீங்கலாக ஜெபிக்கிறார்?
5. இருதயத்தில் பெருகி இருப்பவை எவை?
6. நம்மை காக்கும் பண்புகள் எவை?
7. சபையின் நடுவில் நாம் செய்ய வேண்டியது?
8. கர்த்தரிடம் கேட்ட ஒன்று?
9. யார் யார் கைவிட்டாலும் கர்த்தர் சேர்த்துக்கொள்வார்?
10. ஜீவனுள்ளோர் தேசத்தில் யாருடைய நன்மையைக்காணலாம்?
11. கர்த்தருக்கு காத்திருப்பதால் வரும் நன்மை எது?
12. கர்த்தர் யாருக்கு அரணான அடைக்கலமானவர்?
13. பலவான்களின் புத்திரராயினும் செய்ய வேண்டியது எது?
14. கர்த்தருடைய சத்தம் எந்த மரத்தை முறிக்கும்?
15. கர்த்தருடைய சத்தம் அதிரப் பண்ணும் வனாந்தரம் எது?
16. கர்த்தரின் கோபத்தின் கால அளவு என்ன?
17. கர்த்தருடைய முகம் மறைக்கப்படும் போது ஏற்படும் நிலை என்ன?
18. இருட்டைக்களைந்து எதினால் இடைக்கட்டுவார்?
19. பெலன் குறைந்து உலர்ந்து போனவை எது?
20. பாவம் மூடப்பட்ட மனிதன் எப்படிப்பட்டவன்?

### ஜுன் 2019 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. கர்த்தருடையது - சங்கீதம் 3:8
2. கர்த்தர் - சங்கீதம் 4:8

3. கர்த்தரை நம்புகிறவர்கள் - சங்கீதம் 5:8-11
4. கர்த்தர் - சங்கீதம் 6:8
5. தேவன் - சங்கீதம் 7:11
6. மனுஷரை - சங்கீதம் 8:4
7. துன்மார்க்கரும், தேவனை மறக்கிறவர்களும் - சங்கீதம் 9:17
8. கர்த்தாவே நீரே - சங்கீதம் 10:12-14
9. செம்மையானவனை - சங்கீதம் 11:7
10. கர்த்தருடைய சொற்கள் - சங்கீதம் 12:6
11. சத்துருக்கள் - சங்கீதம் 13:4
12. சிறுமைப்பட்டவனுக்கு - சங்கீதம் 14:6
13. உத்தமனய் நீதியை நடப்பித்து மனதார சத்தியத்தை பேசுகிறவன் - சங்கீதம் 15:2
14. பரிபூரண ஆனந்தம் - சங்கீதம் 16:11
15. துன்மார்க்கர் - சங்கீதம் 17:9,10
16. தேவனாகிய கர்த்தர் - சங்கீதம் 18:28-30
17. கர்த்தருடைய வேதம் - சங்கீதம் 19:7
18. தாம் அபிஷேகம் பண்ணினவரை - சங்கீதம் 20:6
19. ராஜா - சங்கீதம் 21:7
20. சாந்தகுணமுள்ளவர்கள் - சங்கீதம் 22:26

## ஜூன் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Aspin Bejo | Mrs. Priyadarsini Kanagavel |
| Mrs. Felsi Rani John | Mrs. Regina JustaVinolin |
| Mrs. Golden Irene Sheeja | Mrs. Sapthekha Jerry |
| Mrs. Jancy Victor | Mrs. Sarah Raja Singh |
| Mrs. Jaya Victor | Mrs. Sathiya Priya Ramesh |
| Mrs. Juslin Jaslin | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Leela Gladson | Mrs. Shiney Johan |
| Mrs. Manju Martin | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Menaka David | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Percy Jean | |

## Birthday Celebrants – July 2019




| | |
|---|---|
| 01st July | Mr. Alex Baskar |
| 01st July | Miss. Dejina Januel, D/o Mr. Sujin Issac Samuel |
| 02nd July | Mr. C. D. Robin Raj |
| 03rd July | Miss. Meghna Bino, D/o Mr. Bino Vetharaja Singh |
| 04th July | Mrs. Saja, W/o Mr. Arun Paul |
| 05th July | Mr. Jesiel Edward, S/o Mr. Micheal |
| 05th July | Mrs. Shiny Vasila, W/o Mr. Prem Meshach |
| 06th July | Miss. Shana Melanie, D/o Mr. Mohan Babu |
| 07th July | Miss. Gabinna Nissi, D/o Mr. Prem Vijins |
| 11th July | Mrs. Deena, W/o Mr. Sujin Issac Samuel |
| 12th July | Mr. Alex Nithin, S/o Mr. Nelson |
| 13th July | Mrs. Nisha, W/o Mr. Broosewelt |
| 13th July | Mrs. T. Pavithra Ahigen, W/o Mr. D. Ahigen Paul |
| 16th July | Mr. John Jacob |
| 17th July | Mr. Dhanraj |
| 17th July | Miss. Jovina, D/o Mr. Victor Thaya Singh |
| 19th July | Mr. Kasiraja |
| 19th July | Mrs. Jeny Sharlin, W/o Mr. Livingston |
| 20th July | Mr. G. Devaraj |
| 21st July | Miss. Jerlin Stelina, D/o Mr. Justus Martin |
| 24th July | Mrs. C. B. Josepin Jeba Sharmy, W/o Mr. Anto Kingston |
| 24th July | Master. Nikhil Broose, S/o Mr. Broosewelt |
| 25th July | Mrs. Golden Irene Sheeja, W/o Mr. Robin Devadhas |
| 25th July | Mr. Jebister, S/o Mr. John Jacob |
| 25th July | Mrs. Shiney, W/o Mr. Johan Pratheep |
| 26th July | Mr. P. Suresh |
| 26th July | Mrs. Mahizha, W/o Mr. Jenkin Raj |
| 31st July | Mr. S. Jones |


## Wedding Day Anniversaries – July 2019

| | |
|---|---|
| 11th July | Mr. Michael & Mrs. Enolia |
| 12th July | Mr. Edward Sam & Mrs. Sheeba |
| 15th July | Mr. Robin Raj & Mrs. Rabboni |

# இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 01-07-2019 | திங்கள் - அருணோதய ஆராதனை<br>இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00–6:00 |
| 04-07-2019 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 05-07-2019 | வெள்ளி- பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 12-07-2019 | வெள்ளி ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 13-07-2019 | சனி – உபவாச ஜெபக் கூட்டம்<br>இடம் : மார்த்தோமா ஹால் / காலை 10:30–1:00 |
| 18-07-2019 | வியாழன் - பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 18-07-2019 | வியாழன் - ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>இடம் : மார்த்தோமா ஹால் / நேரம்: இரவு 9:00–11:00 |
| 19-07-2019 | வெள்ளி - பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 26-07-2019 | வெள்ளிஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 01-08-2019 | வியாழன் - அருணோதய ஆராதனை<br>இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00–6:00 |
| 01-08-2019 | வியாழன்– இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 02-08-2019 | வெள்ளி - பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |

# ஜெபிக்க சில குறிப்புகள்



திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நம் போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழு தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிட ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், போதகர் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.
- கன்னியாகுமரி பேராயத்தின் புதிய பேராயர் Rt. Rev. Dr. செல்லையா அவர்கள் இறை சித்தம் நிறைவேற்றும் பேராயராய் செயல்பட்டு, பேராயம் நல்ல முறையில் இயங்கவும் இறையருள் வேண்டி மன்றாடுவோம்.
- இந்தியாவில் புதிதாக மீண்டும் பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கும் இருக்கும் மாண்புமிகு. நரேந்திர மோடி அவர்களுக்காகவும் புதிய அமைச்சரவைக்காகவும் ஜெபிப்போம். மனிதநேயமிக்க, மதச்சார்பற்ற நல்லாட்சி நம் மண்ணில் மலர இறைவேண்டல் செய்வோம்.
- இந்தியாவிலுள்ள பல திருச்சபைகள் தாக்கப்பட்டு வருகிறது. தமிழகத்திலும் இந்த நிலை பெருகி வருகிறது. இறைமக்கள் விசுவாசத்தில் உறுதியாயிருக்க ஜெபிப்போம். துன்புறுத்துவோர் சந்திக்கப்பட மன்றாடுவோம்.

**திருப்பணிகளுக்கான மன்றாட்டு குறிப்புகள்:-**

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- பணிக்களங்களில் அற்புத அடையாளங்கள் நிகழவும், அநேக புதிய குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளவும், புதிய புதிய திருச்சபைகள் பெருகவும் ஜெபிப்போம்.
- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**தேசத்துக்காக ஜெபிக்க:-**

- நமது இந்திய நாட்டுக்காகவும், ஆளுகை செய்கிறவர்களுக்காகவும் ஜெபிப்போம்.
- சிறுபான்மையினர் (இந்துக்களல்லாதவர்கள்) நசுக்கப்படுகிற நிலை மாற ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் உள்ள ஒவ்வொருவரும் கர்த்தரே தெய்வம் என்பதை அறிந்துகொள்ள ஜெபிப்போம்.
- ஓமான் தேசத்துக்காகவும், ஆளுகை செய்கிற தலைவர்களுக்காகவும், இங்கு இறைமக்கள் ஆண்டவரை மகிமைப்படுத்த தொடர்ந்து நல்ல சூழ்நிலை உருவாகவும் ஜெபிப்போம்.
- தீவிரவாதிகளால் உலகெங்கிலும் பதற்றம் ஏற்படுகிறது. இந்த நிலை மாற ஜெபிப்போம்.
- உலக நாடுகளுக்காகவும், உலக திருச்சபைகளுக்காகவும் ஜெபிப்போம். போர், வறுமை, தீவிரவாதம், இயற்கை பேரழிவு இவற்றினால் துயரப்படும் மக்கள் உள்ள எல்லா நாடுகளுக்காகவும் ஜெபிப்போம்.

### குடும்பங்களுக்காக ஜெபிக்க:-

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.
- வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.
- கருவுற்றிருக்கிற சகோதரிகள் ஆரோக்கியமாயிருக்கவும், ஏற்ற நாளில் நல்ல விடுதலைப் பெறவும் ஜெபிப்போம்.

## வாழ்த்துகிறோம்!

**"இது கர்த்தரால் ஆயிற்று, நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்"**

கர்த்தருடைய கிருபையால் ஜுலை மாதம் 4-ம் தேதி பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்ட

**Mr. Y. Eha Jerin & Miss. T. Jenifba**

ஆகிய மணமக்கள் எல்லா நலமும் பெற்று கர்த்தருக்குள் நீடு வாழ திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

## அனுதின மன்னா – ஜுலை 2019

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| நாள் | கிழமை | காலை | அனுதினமன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜுலை 1 | திங்கள் | சங்கீதம் 143:1-12 | சங்கீதம் 143:8 | நீதி. 13-15 |
| ஜுலை 2 | செவ்வாய | உபாகமம் 32:1-8 | உபாகமம் 32:8 | நீதி. 16-19 |
| ஜுலை 3 | புதன் | 2சாமு. 22:29-39 | 2சாமு. 22:31 | நீதி. 20-22 |
| ஜுலை 4 | வியாழன் | கலாத்தியர் 5:19-26 | கலாத்தியர் 5:24 | நீதி. 23-25 |
| **ஜுலை 5** | **வெள்ளி** | **ஏசாயா 42:14-17** | **ஏசாயா 42:16** | **நீதி. 26-31** |
| ஜுலை 6 | சனி | எரேமியா 6:13-21 | எரேமியா 6:16 | பிரசங்கி 1-4 |

| நாள் | கிழமை | காலை | அனுதினமன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜூலை 7 | ஞாயிறு | சங்கீதம் 32:1-11 | சங்கீதம் 32:8 | பிரசங்கி 5-9 |
| ஜூலை 8 | திங்கள் | சங்கீதம் 119:97-104 | சங்கீதம் 119:101 | பிரசங்கி 10-11 |
| ஜூலை 9 | செவ்வாய் | ஏசாயா 35:1-10 | ஏசாயா 35:8 | உன்னத. 1-4 |
| ஜூலை 10 | புதன் | 1இராஜா. 8:33-40 | 1இராஜா. 8:36 | உன்னத. 5-8 |
| ஜூலை 11 | வியாழன் | ஏசாயா 30:19-26 | ஏசாயா 30:21 | ஏசாயா 1-3 |
| **ஜூலை 12** | **வெள்ளி** | **ஏசாயா 43:14-21** | **ஏசாயா 43:19** | **ஏசாயா 4-10** |
| ஜூலை 13 | சனி | ஏசாயா 49:8-13 | ஏசாயா 49:11 | ஏசாயா 11-14 |
| ஜூலை 14 | ஞாயிறு | ஏசாயா 57:14-19 | ஏசாயா 57:14 | ஏசாயா 15-19 |
| ஜூலை 15 | திங்கள் | மத்தேயு 9:9-13 | மத்தேயு 9:13 | ஏசாயா 20-24 |
| ஜூலை 16 | செவ்வாய் | லூக்கா 7:11-17 | லூக்கா 7:13 | ஏசாயா 25-28 |
| ஜூலை 17 | புதன் | லூக்கா 15:1-7 | லூக்கா 15:7 | ஏசாயா 29-31 |
| ஜூலை 18 | வியாழன் | 1இராஜா. 3:1-14 | 1இராஜா. 3:14 | ஏசாயா 32-35 |
| **ஜூலை 19** | **வெள்ளி** | **சங்கீதம் 128:1-6** | **சங்கீதம் 128:4** | **ஏசாயா 36-37** |
| ஜூலை 20 | சனி | மாற்கு 14:3-9 | மாற்கு 14:8 | ஏசாயா 38-40 |
| ஜூலை 21 | ஞாயிறு | உபாகமம் 29:1-6 | உபாகமம் 29:3 | ஏசாயா 41-43 |
| ஜூலை 22 | திங்கள் | அப். 14:14-23 | அப். 14:22 | ஏசாயா 44-47 |
| ஜூலை 23 | செவ்வாய் | யோவான் 10:1-10 | யோவான் 10:9 | ஏசாயா 48-51 |
| ஜூலை 24 | புதன் | லூக்கா 11:29-36 | லூக்கா 11:36 | ஏசாயா 52-55 |
| ஜூலை 25 | வியாழன் | யாத். 23:20-33 | யாத். 23:25 | ஏசாயா 56-58 |
| **ஜூலை 26** | **வெள்ளி** | **மாற்கு 8:22-26** | **மாற்கு 8:25** | **ஏசாயா 59-64** |
| ஜூலை 27 | சனி | யோவான் 15:1-15 | யோவான் 15:4 | ஏசாயா 65-66 |
| ஜூலை 28 | ஞாயிறு | 1கொரி. 3:10-15 | 1கொரி. 3:11 | எரேமியா 1-3 |
| ஜூலை 29 | திங்கள் | உபாகமம் 5:22-33 | உபாகமம் 5:33 | எரேமியா 4-7 |
| ஜூலை 30 | செவ்வாய் | ஏசாயா 55:1-10 | ஏசாயா 55:14 | எரேமியா 8-11 |
| ஜூலை 31 | புதன் | மத்தேயு 7:13-14 | மத்தேயு 7:14 | எரேமியா 12-14 |
| ஆகஸ்ட் 1 | வியாழன் | யோவான் 10:1-6 | யோவான் 10:4 | எரேமியா 15-19 |
| **ஆகஸ்ட் 2** | **வெள்ளி** | **லூக்கா 2:41-47** | **லூக்கா 2:47** | **எரேமியா 20-23** |
| ஆகஸ்ட் 3 | சனி | யோவான் 8:42-47 | யோவான் 8:45 | எரேமியா 24-26 |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்

**Contact: RevDr. N. Jesin**

**GSM : 9693 3489**
**Land Line : 2470 5784**
**E-mail : csitco@gmail.com**
**www.csitamilchurchoman.org**

**(For Private Circulation Only)**